விஸ்தரிக்க முடியும் என்கிற வகையில், இடத்தைக் கொடுங்கள் என்று முனிசிபாலிட்டியிடம் கேட்டோம். முனிசிபாலிட்டி கொடுப்பதற்குத் தயாராக இருந்தது. ஆனால் அந்தப் பகுதியில் சிலபேர் என்கரோச்மென்ட் செய்து விட்ட காரணத்தால், அந்த இடத்தை கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துவது என்பது இயலாத காரியமாக இருப்பதால் அந்த என்கரோச்மென்ட் தவிர வேறு பகுதியை அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டால் அங்கே மருத்துவ மனையை விஸ்தரிக்க முடியும் என்று சொல்லி இருக்கிறோம். அந்த நடவடிக்கைகள் இப்போது நடந்து வருகின்றன.

திரு இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது நான் அமைச்சர் அவர்களிடம் இதே கேள்வியைக் கேட்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த இடத்திலே இன்னொரு ஆக்கிரமிப்பு இருக்கிறது என்றும், அதை உடனடியாக அகற்றி அதை விரிவு படுத்த அரசு முயலும் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதுவரை அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை விரிவுபடுத்துவதற்கான எந்தவிதமான திட்டமும் இல்லை. தயவு கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பை அகற்றவும், அந்த ஆஸ்பத்திரியை விரிவு படுத்தவும் முயற்சியை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உடனடியாக அந்த முயற்சியை அரசு எடுக்கும்.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி.

*வினா எண். 126—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் மாணவர் விடுதி வசதிக்குறைவுகளுடன் இயங்கிவருகிறது என்பது உண்மையா?

(ஆ) விடுதிக்கான கட்டிடம் புதிதாகக் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தனித்தனியாகக் கட்ட ஏற்கெனவே ஆணையிடப்பட்டு, கட்டிடப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

1982 மார்ச் 23]

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை அறைகள் கொண்ட விடுதிக் கட்டிடம் ஆண்களுக்காக கட்டப்படுகிறது. அதேபோல எத்தனை அறைகளைக் கொண்ட விடுதி கட்டிடம் பெண்களுக்காக கட்டப்படுகிறது? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். .வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,, ஜி.ஓ. எம்.எஸ். நெம். 1366, ஹெல்த் மற்றும் பேமிலி வெல்பேர்ல், தேதி 3–8–1979–இல் 23·80லட்சம் ரூபாய் அளவுக்கு ஆண்களுக்கு விடுதி கட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஜி. ஓ. எம்.எஸ் நெ. 1386, ஹெல்த் மற்றும் பேமிலி வேல்பேர், தேதி 4–8–79–ல் ரூபாய் 7·75 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்கு விடுதிக் க்கட்டிடம் கட்டுவதற்கென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

புதுக்கோட்டை சென்னை-விரைவுப் பேருந்துப்பணி.

*வினா எண். 622—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-சென்னைக்குஅரசு பேருந்துகள் விடும் உத்தேசமுண்டா?

(ஆ) இல்லையெனில் பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) 9–2–81 முதல் இத்தடத்தில் இரு விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல கேள்வி வரும் முன்பே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி, நன்றி. நன்றி. அது மட்டுமல்லாமல், தற்போது புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்துகளில் அதிகமான அளவில் நெரிசல் ஏற்பட்டு விட்டதால், மேலும் 2 பேருந்துகளை விட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே அவருடைய பாராட்டுதலுக்கு நன்றி. கேள்வியை இப்போது, தான் கேட்டிருக்கிறார். பின்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.